O.S.40/2024
PW1 – திருமுருகன்
நாள் 31.07.2025, 02.55 P.M.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** தாவா சொத்தை யாருடம் இருந்து எனது மனைவி கிரையம் வாங்கினார் என்றால் ஜனத்பீவி என்பவருடம் இருந்து வாங்கினார். கிரையம் 1996ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். கிரையபத்திரத்தில் சர்வே எண் 93/2A/2A என்று குறிப்பிடப்பட்டு கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். கிரையம் வாங்கிய சொத்திற்கு வடக்கே பால்பாண்டி என்பவர் கிரையம் வாங்கிய இடம் உள்ளது என்றால் சரிதான். பால்பாண்டி 1 ஏக்கர் 25 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பால்பாண்டி கிரையம் வாங்கிய சொத்தை அவரது வாரிசுகள் முத்துராமலிங்கம், கருப்புசாமி, கருப்பையா, முருகவேல் ஆகியோர் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்துகொண்டதில் 1ம் பிரதிவாதி முத்துராமலிங்கத்திற்கு சர்வே எண் 93/3D விஸ்தீரணம் 12.5 ஏர்ஸ் என்றும், கருப்புசாமிக்கு சர்வே எண் 93/3C விஸ்தீரணம் 12.5 ஏர்ஸ் என்றும், கருப்பையாவிற்கு சர்வே எண் 93/3B விஸ்தீரணம் 12.5 ஏர்ஸ் என்றும், முருகவேலுக்கு சர்வே எண் 93/3A விஸ்தீரணம் 13 ஏர்ஸ் என்றும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் பிரிப்பதற்கு முன்னதாகவே நான் கடலாடி தாசில்தாரிடம் புகார் செய்தேன். அதை மீறி பட்டா பெற்றுக்கொண்டார்கள். நான் தாசில்தாரிடம் புகார் செய்ததற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர்கள் மேற்படி நிலத்தை பிரித்து பட்டா பெற்ற விவரம் தெரிந்து நான் எந்தவித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் வாங்கிய சொத்துக்கு 29.10.2009ம் தேதியில் எனது மனைவி பெயரில் பட்டா மாற்றம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். இந்த பட்டா மாறுதல் உத்தரவைத்தான் இந்த வழக்கில் 2ம் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு சர்வே எண் 93/3D–ல் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ள சர்வே எண் 93/3D–க்கும் அதற்கு தெற்கில் உள்ள சர்வே எண் 93/2A 2Cக்கும் இடையில் உள்ள வரப்பில் 36 பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். நன்றாக காய்க்கும் நிலையில் உள்ள

பனைமரங்கள் எத்தனை என்றால் காய்க்கும் மரங்கள் உள்ளது அது எத்தனை என்று எனக்கு தெரியாது.

3. ஒரு பனைமரம் வைத்து மரம் காய்ப்பதற்கு சுமார் 25 வருடம் ஆகுமா என்றால் 10 முதல் 15 வருடங்களில் பனைமரம் காய்த்துவிடும். தாவா சொத்து உள்ள பகுதியில் வரப்புகளில் பெரும்பாலும் பனைமரங்கள் இருக்கும் என்றால் சரிதான். சர்வே எண் 93/2A 2C க்கும் இடையில் உள்ள வரப்பில் 36 பனைமரங்கள் யார் வைத்தார்கள் என்றால் ஆதியில் தாவா சொத்திற்கு பாத்தியப்பட்ட மூக்கையா வைத்த பனைமரங்கள் ஆகும். மூக்கையா என்பவரிடம் இருந்து நான் கிரையம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. மூக்கையா தாவா சொத்தை பால்ச்சாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பால்ச்சாமி அந்த சொத்தை அல்லாபிச்சனை என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

4.மூக்கையாவின் மனைவி வேலம்மாள் என்பவரிடம் இருந்து தான் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பால்பாண்டி தேவர் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மூக்கையாவின் மனைவி வேலம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்தைதான் பால்பாண்டியின் வாரிசுகள் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பால்பாண்டியின் மக்கள் நான்கு பேரும் பிரித்து கொண்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 50.5 ஏர்ஸ் என்றாலும் அது ஏக்கர் கணக்கில் 1.25 ஏக்கர் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. பால்பாண்டி எவ்வளவு இடம் கிரையம் பெற்றாரோ அந்த அளவு இடத்தை தவிர 1 செண்ட் கூட அதிகமாக பால்பாண்டியின் வாரிசுகள் பட்டா மாற்றிக்கொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நாங்கள் தாவா சொத்தை கிரையம் வாங்கும் போது வடபுறம் உள்ள வரப்பில் உ்ள்ள 36 பனைகளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 2 வருட வயது உள்ள பனைகளாக இருக்கும். நாங்கள் எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சர்வே எண் 93/2A2A சொத்திற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 93/2A2A உள்ள 1 ஏக்கர் 12 செண்ட் சொத்திற்கு எங்களுக்கு தீர்ப்பு கிடைத்தால் போதும் என்றால் சரிதான். என்னுடைய பத்திரத்தில் உள்ள நான்கு எல்லைமாலின்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும். என்னுடைய பத்திரத்தில் உள்ள நான்குமாலில் உள்ள அளவிற்கு எத்தனை சர்வே எண் உள்ளது என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை.

6. தாவா சொத்திற்குள் எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்றால் இரண்டு சர்வே எண்கள் உள்ளது. ஒரு சர்வே எண் 93/2A2A மற்றோரு சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்ற ஆணையர் நிலத்தை அளக்கும் போது எங்களது இடத்தை அடையாளம் காட்டினோமா என்றால் காட்டினோம். நான் அடையாளம் காட்டிய நிலத்தின் வடக்கு எல்லையில் அடையாளத்திற்கு வரிசையாக மரங்களோ, வரப்போ இருந்ததா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் வீட்டின் நடுப்பகுதியில் நான் காண்பித்த வடக்கு எல்லை இருந்தது. நீதிமன்ற ஆணையர் வந்து நிலத்தை அளக்கும் போது 1ம் பிரதிவாதி வீடு கட்டி சுமார் 10 ஆண்டுகள் பழைமையானதாக இருந்ததா என்றால் நான்கு ஆண்டுகள் பழைமையானதாக இருந்தது.

7. 1ம் பிரதிவாதியின் வீடு சுமார் 10 ஆண்டுகள் பழைமையானதாக இருந்ததாகவும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண் 93/2A 2C , 93/3D–க்கு இடையில் 36 பனைமரங்களும் தற்போது உள்ளதா என்றால் உள்ளது. அந்த பனைமரங்கள் வழியே இருந்த வரப்புகளும் தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி நான் குறிப்பிடும் வடக்கு எல்லையில் வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் வீடு கட்ட போவதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 ஏக்கர் 12 செண்டில் தற்போது எவ்வளவு என் கைவசம் உள்ளது எவ்வளவு ஆக்கிரமிப்பில் உள்ளது என்றால் 67 செண்ட் என் கைவசம் உள்ளது மீதம் உள்ளது ஆக்கிரமிப்பில் உள்ளது.

8. 1ம் பிரதிவாதி எந்த சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் அவருடைய சொந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. 36 பனைமரங்கள் உள்ள வரப்பிற்கு வடபுறம் உள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்திய அனுபவமான சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்யும் பகுதியை மீட்பதற்கு சுவாதீன பரிகாரம் நான் கோரவில்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டு சொன்னதுபோல் ஸ்தலத்தில் 1 ஏக்கர் 12 செண்டி அளவுடைய நிலம் எதுவும் இல்லை என்றாலும் நான் தவறான விஸ்தீரணத்தை குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி கிரையம் வாங்கியுள்ள சொத்தான வா.சா.ஆ.1ல் கண்டுள்ள

சொத்திற்கு வடக்குமாலாக மூ.வேலம்மாளிடம் வே.பால்பாண்டி கிரையம் பெற்றுள்ள பூஞ்சை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

9. பால்பாண்டி கிரையம் வாங்கிய சொத்து போக மீதம் உள்ள சொத்தில் நான் இரண்டு பட்டாக்கள் வாங்கியுள்ளேன் என்றாலும் மேற்படி இரண்டு பட்டாக்களில் உள்ள சொத்துக்களை விட்டுவிட்டு 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனுபவக்கும் சொத்து அவருடைய சொத்து என்பதால் சுவாதீன பரிகாரம், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு பரிகாரங்கள் கேட்டு மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும் நான் மேல் முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 93/3D சொத்து என்னுடைய பாத்திய அனுபவத்தில் இருக்கிறது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் 1ம் பிரதிவாதியின் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி